21.06.2023

அ.வ.எண். 937/2017

வாசா.3 - தண்டபாணி

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய வீடு ராசிபாளையத்தில் உள்ளது. என்னுடைய விவசாய பூமிகள் அனைத்தும் ராசிபாளையத்திலேயே உள்ளது. என்னை இந்த நீதிமன்றத்திற்கு நானாகதான் வந்தேன். யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. வாதி தெய்வசிகாமணியின் தாவா சொத்து அரசூரில் உள்ளது. எனக்கு அரசூரில் சொத்து எதுவும் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் என் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தெய்வசிகாமணி அரசூர் பஞ்சாயத்து புல எண்.194 ல் இடம் வாங்கியுள்ளார். உட்பிரிவு எண் நினைவில் இல்லை. எனது வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்குமானால் என்றால் 4 கி.மீ இருக்கும். நான் அந்த வழியே செல்வதற்கு எனக்கு வேலை உள்ளதா என்றால் இல்லை. அவர் தாவா சொத்தில் வேலி அமைக்கும் பொழுது என்னை அழைத்ததால் நான் சென்றேன். அவர் எனக்கு நண்பர் அதனால் என்னை அழைத்தார். நான் தமிழக விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவராக உள்ளேன். வாதிகள் இருவரும் எங்களது சங்க உறுப்பினர். வாதிகள் சங்க உறுப்பினர்கள் என்றும் நான் தாவா சொத்திற்கு செல்லாமரலேயே அதைப் பற்றிய உண்மை நிலவரங்கள் தெரியாமல் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/தண்டபாணி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2023.06.21 13:53:06 +0530

District Munsif,
Sulur.